www.lkedu.lk

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்
KARAITIVU DEVELOPMENT & PLANNING SOCIETY

விடுமுறைக்கால மாணவர் நல·கல்வி அபிவிருத்தித் திட்டம்
EDUCATIONAL DEVELOPMENT PLAN ON VACATION PERIOD

சகல பாடங்களுக்குமான மாதிரி வினாத்தாள்கள்
MODEL PAPERS FOR ALL SUBJECTS

KDPS

GRADE - 04

அனுசரணை:

AUSKAR

ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம்
AUSTRALIAN KARAITIVU ASSOCIATION

Scanned with CamScanner

www.lkedu.lk

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

மதிப்புக்குரிய பெற்றோர்களே!
வணக்கம்.

விடுமுறைக் காலத்தை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்

எதிர்பாராத கொரோனா வைரஸ் நோய் (COVID-19) அச்சுறுத்தல்கள் காரணமாக நாட்டின் சகல பாடசாலைகளும் திடீரென மூடப்பட்டதால் ஏனைய சகல விடயங்கள் போன்று மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு விட்டன. நோய் ஆபத்துக்களிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பது எமது கடமையாக இருப்பது போல, இந்த எதிர்பாராத நிலைமை காரணமாக மாணவர்களது கல்வியில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படாதவண்ணம் கண்காணிப்பதும் எங்களது பொறுப்பாகும். திடீரென விடுமுறை அறிவிக்கப்பட்டதால் இக்காலப் பகுதியில் எவ்வாறு கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்ற வழிகாட்டல்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கான அவகாசம் கிடைக்காமல் போய்விட்டது. எனவே இவ்விடயம் சம்பந்தமான சில வழிகாட்டல்களைப் பெற்றோர் என்றவகையில் உங்களுக்கு வழங்குவதற்காகவே நாங்கள் இக்கடிதம் மூலம் உங்களைத் தொடர்பு கொள்கின்றோம்.

நீண்ட விடுமுறைக் காலப்பகுதியை மாணவர்கள் பயனுள்ள வழிகளில் எவ்வாறு கழிப்பது என்ற வழிகாட்டல்களை வளர்ந்தவர்களாகிய நாங்கள் சரியாகக் கொடுக்காது போனால் மிகப் பெறுமதியான காலத்தை வீணடித்து விட்டு. பாடசாலையில் கற்ற விடயங்களையும் மறந்து விட்டு தவறான நடைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் பழகிக் கொள்வதால் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தொல்லையாகவும் பாடசாலைக்குப் பொருத்தமற்றவர்களாகவும் நெறி பிறழ்வானவர்களாகவும் மாறக்கூடிய ஆபத்தான நிலை ஏற்படலாம்.

எனவே இந்நிலையைக் கருத்திற் கொண்டு இக்காலப்பகுதியை அவர்கள் பயனுள்ள வழிகளில் எவ்வாறு கழிக்கலாம் என்பதற்கான சில வழிகாட்டல்களைத் தருகின்றோம்.

01. கற்றல் தொடர்பான விடயங்கள் :

1. தினமும் பாடசாலைப் பாடங்களை மீட்டல். அதற்கான வீட்டு நேரசூசியை அமைத்துக்கொள்ளல். (வீட்டு நேரசூசி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)
2. தினமும் குறைந்தது 01 மணித்தியாலமாவது பத்திரிகை, புத்தகங்கள், புராண நூல்கள் என்பவற்றை வாசித்தல்.
3. முக்கியமான பாடங்களுக்கான செயல்நூல்களிலுள்ள பயிற்சிகளைச் செய்து விட்டு பாடசாலை ஆரம்பித்ததும் பாட ஆசிரியரிடம் காட்டுதல்.
   தரம் 6 - 11 மாணவர்கள் தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சமயம் போன்ற செயல்நூல்களையும், தரம் 3, 4, 5 மாணவர்கள் தமிழ், கணிதம், சுற்றாடல் செயல்நூல்களையும் செய்தல். இவற்றுக்கு மேலதிகமாக வகுப்பாசிரியர்கள் தரும் வேலைகளையும் செய்தல்
4. தவணைப் பரீட்சை வினாத்தள்களைச் செய்தல்.
5. நாளாந்த எழுத்துப் பயிற்சி (தமிழ் பாடக் கொப்பியில் எழுத வேண்டும்)
   - தரம் 03, 04 மாணவர்கள் தினமும் விரும்பிய 03 வசனங்கள் எழுதுதல்.
   - தரம் 05 மாணவர்கள் தினமும் விரும்பிய 05 வசனங்கள் எழுதுதல்.
   - தரம் 06, 07 மாணவர்கள் தினமும் விரும்பிய 07 வசனங்கள் எழுதுதல்.
   - தரம் 09 மாணவர்கள் தினமும் 50 சொற்கள் கொண்ட ஒரு பந்தியை எழுதுதல்.
   - தரம் 10, 11 மாணவர்கள் தினமும் 75 சொற்கள் கொண்ட ஒரு பந்தியை எழுதுதல்.
     (தமது பிள்ளையின் வகுப்புக்குப் பொருத்தமானதைப் பெற்றோர் தெரிவு செய்து கொடுத்து எழுத ஊக்கப்படுத்தவும்)
6. வாரத்திற்கு 03 சித்திரங்களை வரைதல் (விரும்பியதை வரையலாம்)
7. கணித வாய்ப்பாடுகளை மனனம் செய்தல் (2 - 12 வாய்ப்பாடுகள் ஆங்கில, சிங்களப் பாடப் புத்தகத்தைத் தினமும் வாசித்தலும் ஆங்கில, சிங்கள மொழிச் சொற்களைக் கொப்பியில் எழுதி மனனமிடுதலும்.

Scanned with CamScanner

www.lkedu.lk

02. திறமைகளை வளர்ப்பதற்கான செயற்பாடுகள் :

தொடர்ந்தும் பாடசாலைப் பாடங்களை மாத்திரம் படித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது கட்டாயமில்லை. ஏனெனில் கல்வி என்பது புத்தகப்படிப்புடன் குறுகி விடுவதல்ல. எதிர்கால வாழ்வை வெற்றிகரமாக வாழ்வதற்கு மாணவர்களிடம் மறைந்திருக்கும் பல்வேறு திமைகளை வெளிக் கொண்டுவந்து அவற்றை வளர்த்து விடுவதும் கட்டாயமாகும்.

எனவே நாம் இங்கு குறிப்பிடுவது போன்ற திறமைகளை வளர்த்துக் கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் அவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேறுவதற்கும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிப்பதற்கும் கணனி, கைப்பேசி மற்றும் இலத்திரனியல் சாதனங்களில் வீணாகக் காலத்தைக் கழித்து நெறி பிறழ்வைத் தடுப்பதற்கும் மன உளைச்சல், விரக்தி என்பவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உதவியாக அமையும்.

1. ***வீட்டு வாசிகசாலை ஒன்றை (Home Library) அமைத்தல்*** : அது குறைந்தளவு புத்தகங்களைக் கொண்டு சிறியதாக இருந்தாலும் சரி. அதில் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைத் தேடிச் சேர்க்கச் சொல்லலாம். பிள்ளைகளுடன் பெற்றாரும் சேர்ந்து வாசிக்கலாம்.

2. ***வீட்டுத் தோட்டம் அமைத்தல்*** : காய்கறி வகைகள், பூக்கன்றுகள் என்பவற்றைத் தோட்டத்தில் அல்லது முற்றம், கொங்கிரீட் என்பவற்றில் சாடிகளில் அல்லது பசளை பேக், அரிசிப் பை என்பவற்றில் நடலாம். வீட்டுத் தேவைக்கு மற்றும் வருமானத்திற்கும் உதவும்.

3. ***கோழி வளர்ப்பு, காடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு*** : இவற்றில் வசதியானதை, சிறிய அளவில் அல்லது பெரிய அளவில் செய்யப் பெற்றோர் உதவலாம். இவை குடும்பத்தின் வருமானத்திக்கும் உதவியாக அமைவதுடன் தொழிற் பயிற்சியாகவும் அமையும்.

4. ***உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக்கள்*** : அதிகமான நேரத்தை வீணாக அல்லது தூக்கத்தில் கழிப்பதைத் தவிர்த்து உடலைச் சோம்பேறித்தனமின்றி சுறுசுறுப்பாகவும் நோய்களின்றியும் வைத்துக் கொள்வதற்கு விளையாட்டுக்களைப் பெற்றோர் கட்டாயம் ஏற்பாடு செய்து கொடுக்கவும்.
   - கயிறு பாய்தல்
   - பந்தடித்தல்
   - பெட்மின்டன் விளையாடுதல்
   - கயிறு இழுத்தல்
   - வொலிபோல் விளையாடுதல்
   - உடற்பயிற்சிகள் செய்தல்
   - மற்றும் உங்களுக்கு வசதியான ஏனைய விளையாட்டுக்கள்.

இவற்றை ஆண், பெண் பிள்ளைகள் இருபாலாரும் செய்யலாம். பெற்றோரும் சேர்ந்து குடும்பமாகவும் செய்யலாம். அப்போது பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையிலான அன்பும் தொடர்பும் அதிகரிக்கும். விளையாட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்கலாம்.

5. ***வீட்டை ஒழுங்குபடுத்துவதில் பெற்றோருக்கு உதவுதல்*** : வீட்டுப் பொருட்களை ஒழுங்குபடுத்தி வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கான சிரமதானங்களைச் செய்யலாம்.

6. ***தையல் வேலைகள், சமையல் வேலைகள், கணனிப் பயிற்சிகள்*** : தையல் மெஷின் இருக்கும் வீடுகளில் ஆண், பெண் பிள்ளைகளுக்குத் தையலைப் பழக்கலாம். கணனியில் குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரம் வேலைகளைக் கொடுக்கலாம். சமையல் வேலைகளில் பெண் பிள்ளைகளை ஈடுபடுத்திப் பழக்குவதைப் போன்று ஆண் பிள்ளைகளையும் பழக்கலாம்.

7. ***மத அனுட்டானங்களில் ஈடுபடுதல்*** : சூரிய நமஸ்காரம், தியானம், மூச்சுப் பயிற்சி, யோகா, திருமுறை ஓதுதல் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதற்கு ஆர்மூட்டல்.

8. ***செய்திகளை அறிந்து கொள்ளல்*** : நாட்டு நிலைமைகள், உலக நிலைமைகள் பற்றிய செய்திகளை பத்திரிகைள், டீவீ, ரேடியோ மூலம் அறிந்து கொள்ளுதல்.

9. ***வீட்டு மாணவர் மன்றம்*** : விட்டில் 3, 4 பிள்ளைகள் இருந்தால் அல்லது அயல் வீட்டுப் பிள்ளைகளைச் சேர்த்து அவர்கள் மத்தியில் வாரத்திற்கு 01 அல்லது 02 மாணவர் மன்றங்களைச் செய்யுமாறு சொல்லலாம். பேச்சு, கதை, பாட்டு, நாடகம்..... இன்னும் நிகழ்ச்சிகளைப் பிள்ளைகளுக்குத் தயார்படுத்தி குடும்பத்துடன்

www.lkedu.lk

அவற்றைப் பார்க்கலாம். சில வேளை பரிசுகளையும் பெரியவர்கள் கொடுத்தால் அல்லது வீடியோ பன்னி வைத்தால் இன்னும் உற்சாகமடைவார்கள்.

10. பயனுள்ள CD க்களைப் பெற்றுக் கொடுத்தல் : கணனி, கைப்பேசி மற்றும் இலத்திரனியல் சாதனங்களில் மாணவர்கள் மூழ்குவதைத் தவிர்க்க வேண்டுமாயின் அவற்றிற்கு மாற்றீடாக நல்ல பயனுள்ள CD களைப் பார்ப்பதற்குத் தினமும் சிறிது நேரத்தை ஒதுக்கலாம். (பாடத்துடன் தொடர்பான விடயங்கள், இதிகாச புராணக் கதைகள், பெரியார்கள், விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு, பேச்சுக்கள், வரலாறு சம்பந்தமானவை, இறைவனின் இயற்கைப் படைப்புக்கள்...)

11. வாராந்த குடும்பக் கலந்துரையாடல் : வாரத்தில் வசதியான ஒரு நாளில் தந்தை, தாய் மற்றும் குடும்பத்தவர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து பிள்ளைகள் சம்பந்தமான சகல விடயங்களையும் கலந்துரையாடுவதற்கான ஓர் அமர்வை ஏற்படுத்திக் கொள்ளல். (ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலம் அளவில்) அதில் பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடலாம் :

- பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமான விடயங்கள்
- அவர்களது பிரச்சினைகள் பற்றிக் கதைக்கலாம்
- வணக்க வழிபாடுகள்
- குடும்ப விவகாரங்கள், வீட்டின் பொருளாதார நிலைமைகள்
- பொழுதுபோக்குகள், உடலாரோக்கியம், உணவுப் பழக்கங்கள்
- மற்றும் ஏனைய விடங்கள்...

எதிர்பாராத வகையில் கிடைத்த பாடசாலை விடுமுறையில் பிள்ளைகளை எவ்வாறு வழிப்படுத்துவது என்பது பற்றிய பெற்றோர்களுக்கான சில ஆலோசனைகளை மேலே தந்திருக்கின்றோம். இவ்விடுமுறை காலத்தை திட்டமின்றி வீணடித்து மாணவர்கள் தீய செயற்பாடுகளிலும் சீர்கேடுகளிலும் விழுந்து அறிவையும் ஒழுக்கத்தையும் இழந்து விடாமல் பாதுகாப்பது எங்கள் அனைவரதும் பொறுப்பு என்பதால் பெற்றோர்கள் இந்த விடயங்களில் கூடிய கவனமெடுத்து வழிகாட்டுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். மேற்கூறப்பட்ட விடயங்களில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதன் மூலம் பிள்ளைகள் நிச்சயம் பயனடைவார்களென எதிர்பார்க்கின்றோம். இங்கு கூறப்பட்டவற்றில் எதனையும் செய்யாதிருக்காமல் அல்லது பிள்ளைகள் செய்வதைக் கண்காணிக்காமல் விட வேண்டாம். தமக்கு வசதியானவற்றைப் பிள்ளைகளுடன் கலந்துரையாடிச் செய்யுங்கள். இதற்கும் மேலதிகமான ஆலோசனைகள் தேவைப்பட்டால் நீங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியரைத் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் மேற்கூறப்பட்ட விடயங்களை எந்தளவுக்கு நிறைவேற்றினார்கள் என்பது பற்றிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின் மாணவர்கள் கேட்கப்படுவார்கள் என்பதையும் சிறப்பாக இவற்றைச் செய்து வரும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்பதையும் அவர்களுக்குச் சொல்லி விடுங்கள். குறிப்பாகப் படிக்கும் விடயங்கள் பற்றிக் கண்டிப்பாக விசாரிக்கப்படுவார்கள். மேலும் நிறைவேற்றிய விடயங்களைக் குறித்துக் கொள்வதற்கான படிவம் ஒன்றையும் இத்துடன் அனுப்புகின்றோம். விடுமுறை முடிந்து வந்து (பெற்றோரின் கையொப்பத்துடன்) தமது வகுப்பாசிரியரிடம் அதனை ஒப்படைக்கச் செய்யவும்.

-நன்றி-

இப்படிக்கு

KDPS கல்வி மேம்பாட்டுக் குழு

திருமதி.தனுஷியா.ராஜசேகர்-SLEAS
திரு.A.சஞ்சீவன்-SLEAS
திரு.S.ஹரீந்திரன்-M.Sc(Agro) ARM-CCB
திரு.T.சுஜிகரன்-B.A
திரு.V.சத்தியமாறன்-B.A

Scanned with CamScanner

www.lkedu.lk

கொரோனா (Covid-19) தொடர்பான பொது அறிவு விடயங்கள்

01. கொரோனா வைரஸ் முதன் முதலில் எந்த நாட்டில் இனங்காணப்பட்டது?
சீனாவில் (ஹுபேய் மாகாணம் தலைநகர் வுஹான் இல்)

02. கொரோனா வைரஸ் எந்த விலங்கில் இருந்து பரவியதாக நம்பப்படுகின்றது?
வௌவால்

03. கொரோனா தொற்றுக்கு இலக்கான புகழ் பெற்ற அரச குடும்பத்தைச் சேர்ந்த நபர் யார் ?
பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ்

04. இதுவரை கொரோனா தொற்றுக்கு இலக்கான ஒரு நாட்டின் அதிபர் யார்?
பிரித்தானிய பிரதமர் வொரிஸ் ஜோன்ஸன்

05. கொரோனாவினால் அதிக உயிரிழப்புகளைச் சந்தித்துள்ள ஐரோப்பிய நாடு எது?
இத்தாலி (29.03.2020)

அன்பார்ந்தவர்களே!



தற்போது வைரஸ் சம்பந்தமான பதட்ட நிலையில் நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றோம். எமது நம்பிக்கைகளை இந்த வேளையிலே நாம் இழக்கக் கூடாது. நாம் அனைவரும் இணைந்து தினசரி மாலை ஆறு மணிக்கு எமது எமது கடவுள்களின் பெயரில் பிரார்த்தனை செய்கின்ற பொழுது தற்போதைய நிலையை நல்லதொரு மாற்றத்திற்குக் கொண்டுவரலாம். இதை ஒரு மூட நம்பிக்கையாக நீங்கள் கருதினாலும் பறவாயில்லை ஆனால் ஒரு 5 நிமிடங்கள் உங்களுக்காகவும். உங்கள் குடும்பத்திற்காகவும். உங்கள் உறவுகளுக்காகவும். உலக நலத்திற்காகவும் ஒதுக்கித் தான் பார்ப்போமே! எல்லோரும் ஒரே நேரத்தில் பிரார்த்தனை செய்தால் நல் விளைவு அதிகமாகும்.

தினசரி மாலை 6 மணிக்கு எல்லோரும் 5 நிமிடங்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவோம். இந்த நிலமையை மாற்றித் தரும்படி இறைவனை இறைஞ்சுவோம்.

Scanned with CamScanner

www.lkedu.lk

<u>ஆட்கொல்லி நோயான கொரோனாவில் இருந்து நம்மையும் நாம் நேசிக்கின்ற தாய் நாட்டையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு கீழுள்ள சுகாதார நடைமுறைகளை நாம் பின்பற்றுவதோடு எம்மைச் சார்ந்தவர்களையும் அதனைப் பின்பற்றுவதற்கு வழிப்படுத்துவோம்.</u>

1. சவர்க்காரம் மற்றும் கை சுத்திகரிப்பானினால் 20 செக்கன்கள் வரை கைகளை அடிக்கடி கழுவுங்கள். மேலதிகமாக அல்கஹால் கொண்ட கை சுத்திகரிப்பானை கைகளில் பூசிக்கொள்ளலாம்.



2. இருமல் அல்லது தும்மல் வரும் போது கைக்குட்டையை அல்லது ரிசுவை பாவித்து வாயையும் மூக்கையும் மூடுங்கள் அவை இல்லாத பட்சத்தில் வசதியான முழங்கையினால் அவற்றை மூடுங்கள். ரிசுவை மூடியுடன் கூடிய குப்பைக் கூடைக்குள் வீசுங்கள்.





3. அடிக்கடி முகம், மூக்கு, கண் மற்றும் வாயைக் கையினால் தொடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.



4. இருமல், சளி, காய்ச்சல் உள்ள எவருடனும் நெருங்கிய தொடர்பைத் தவிருங்கள்.

5. உங்களுக்கு அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கு காய்ச்சல் இருமல் அல்லது சுவாசிப்பதில் பிரச்சினை இருப்பதாக உணர்ந்தால் அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ளுங்கள். அத்துடன் பரிந்துரைக்கப்பட்ட முகமூடியை (mask) அணிந்து கொள்ளுங்கள்.

6. சன நெரிசல் உள்ள இடங்களை தவிருங்கள்

Scanned with CamScanner

www.lkedu.lk

7. ஒருவருடன் உரையாடும் போது அல்லது பொது இடங்களுக்குச் செல்லும் போது இன்னொருவரிடம் இருந்து குறைந்தது 1 மீற்றர் இடைவெளியைப் பேணுங்கள்.

8. வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்குள் செல்லும் போது சவர்க்காரம் போட்டு குளித்து விட்டு அல்லது கை, கால், முகம் என்பவற்றை நன்றாகச் சவர்க்காரம் இட்டு கழுவி விட்டுச் செல்லுங்கள்.

9. நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகளை தொட்டு பரிமாறுவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்.

கொரோனா நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக அரசாங்கம் பிறப்பிக்கும் உத்தரவுகளை மதித்து நடப்பதோடு ஏனையோரையும் அவற்றை மதித்து நடக்கக் கற்றுக் கொடுத்து சமூகப் பொறுப்புள்ள, நாட்டுப் பற்று மிக்க பிரசைகளாகத் திகழ்வோம்.

KDPS இன் கடந்த கால செயற்பாடுகள்...

- சுயதொழிலுக்காக ஆலோசணை வழங்கி வருகின்றமை.
- தெரிவு செய்யப்பட்ட (க.பொ.த உயர்தர) 20 மாணவர்களுக்கான 2,500/= நன்கொடையாக வழங்கியமை.
- காரைதீவில் உள்ள அங்கவீனமுற்றோருக்கான உதவிகள் வழங்கியமை.
- காரைதீவில் உள்ள வறிய குடும்பங்களுக்கான 1ம் கட்டமாக 214 குடும்பங்களுக்கு 500/= உணவு வெளச்சர் வழங்கியமை.
- காரைதீவில் உள்ள வறிய குடும்பங்களுக்கான 2ம் கட்டமாக 189 குடும்பங்களுக்கு 500/= உணவு வெளச்சரும் 363 குடும்பங்களுக்கு 1,000/= உணவு வெளச்சரும் வழங்கியமை.

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

Scanned with CamScanner

www.lkedu.lk

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

தரம் 04

மாணவர்களுக்கான விடுமுறைகால செயற்றிட்டம்

முதலாந் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை – 2020

பாடம் : சுற்றாடல் சார் செயற்பாடு

வ. துஷ்யந்தன்(JP),BEd
(Dip.in.teach- primary merit)

பெயர் :- ..... நேரம் :-1. 30 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுவோம்.

01. கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. தினமும் எண்ணெய் தேய்த்துச் சீவ வேண்டிய பகுதி.
   1. பென்சில் 2. சப்பாத்து 3. தலைமுடி

2. எமது உருவத்ததைப் பார்த்துச் சீர்செய்து கொள்ள உதவுவது.
   1. பாடநூல் 2. நிலைக்கண்ணாடி 3. புகைப்படம்

3. தேசியக் கொடியில் உள்ள குறியீடுகளில் ஒன்று.
   1. சூரியன் 2. சந்திரன் 3. அரசிலைகள்

4. தேசியக் கீதம் பாடப்படும் போது நிற்கவேண்டிய சரியான மெய்ந் நிலை.
   1. இலகுவாக நிற்றல் 2. கவனமாக நிற்றல் 3. நேராக நிற்றல்

5. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம்.
   1. வாகை 2. வேம்பு 3. நாவல்

6. தாவர இலைகளை உண்டு தாவரங்களுக்குச் சேதம் ஏற்படுத்துவது.
   1. வெட்டுக்கிளி 2. ஈசல் 3. செண்பகம்

7. பகல் வேளையில் சூழலில் நடமாடித் திரியும் பிராணி.
   1. வெளவால் 2. நத்தை 3. காகம்

8. முலையூட்டி இனத்தைச் சேராத பிராணி.
   1. நாய் 2. காகம் 3. வெளவால்

9. பூச்சி இனங்களுக்குக் காணப்படும் கால்களின் எண்ணிக்கை.
   1. ஆறு 2. எட்டு 3. இரண்டு

10. வயலில் சேற்றை மட்டமாக்கப் பயன்படும் உபகரணம்.
   1. மண்வெட்டி 2. அரிவாள் 3. பரப்புப் பலகை

11. கொல்லன் பட்டறையில் நெருப்பு எரிய காற்றைப் பெற உதவுவது.
   1. பட்டறை 2. துருத்தி 3. சம்மட்டி

12. வலையில் மீன்கள் வந்து ஒன்று சேருமிடம்.
   1. மடி 2. நாம்புவ 3. குல்லம்

13. மண்ணை வழப்படுத்த உதவும் பிராணி.
   1. மண்புழு 2. வெட்டுக்கிளி 3. தவளை

14. தாவர இலைகளை மட்டும் உண்ணும் விலங்கு.
   1. நரி 2. மாடு 3. கோழி

KDPS

Scanned with CamScanner

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

www.lkedu.lk

02. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக.

1. பிராணிகளினால் எமது சூழல் அழகு பெறுகின்றது. ( )
2. குப்பைகளைப் பசளையாக மாற்றுவதற்கு மண்புழு உதவுகின்றது. ( )
3. பொது இடங்களில் ஒன்று வைத்தியசாலை ஆகும். ( )
4. பிரித்தானியர் 1815 ஆம் ஆண்டு இலங்கை முழுவதையும் கைப்பற்றினர். ( )
5. பீற்றூட் கிழங்கினால் சீனி தயாரிக்க முடியும். ( )
6. இந்துக்களின் வழிபாட்டு நூல் பகவத் கீதையாகும். ( )
7. வண்ணத்துப் பூச்சிகளுக்கு கண் இமைகள் இல்லை. ( )
8. காசோலை மாற்ற தபாலகம் செல்ல வேண்டும். ( )
9. அரச இலச்சினையில் வாளேந்திய சிங்கம் நாடும் கட்டுப்பாடான மக்களையும் குறிக்கின்றது. ( )
10. மாலையில் சூரிய நமஸ்காரப் பயிற்சியில் ஈடுபடுவது உடலுக்கு நல்லது. ( )

03. "அ" பகுதியுடன் "ஆ" பகுதியை இணையுங்கள்.

"அ" பகுதி	"ஆ" பகுதி
1. இரவில் மலரும் பூ வகை	கற்றாளை
2. தேசியக் கொடியில் செம்மஞ்சள் பட்டி	சுத்தியல்
3. மீலாதுன் நபிதின விழாவை கொண்டாடுபவர்	போர்த்துக்கேயர்
4. இலங்கையை இறுதியாக ஆட்சி செய்த வெளிநாட்டவர்	கடுபுல்
5. இலங்கையை முதலில் ஆட்சி செய்த வெளிநாட்டவர்	அனோபிளஸ் நுளம்பு
6. அழகு சாதனப் பொருட்களில் சேர்க்கப்படும் தாவரம்	தமிழர்
7. இலைமூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்	ஈடிஸ் வகை நுளம்பு
8. ஆணி அறைய பிடுங்கப் பயன்படுவது	முஸ்லிங்கள்
9. பலகையில் குழி தோண்டப் பயன்படுவது	ஆங்கிலேயர்
10. டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு வகை	வீட்டு ஈ
11. மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு வகை	சதைக்கரைச்சான்
12. கழிச்சல் நோயைப் பரப்பும் பிராணி	உளி

KDPS

Scanned with CamScanner


www.lkedu.lk


04. பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டில் எழுதுங்கள்.


உடலைத் தளர்த்தல், ஒற்றுமையாக, பிரதேச சபை, திடசித்தம், தழிழர், நுளம்புகள், மின்சார சபையை, பூனை


1. நாட்டில் உள்ள எல்லா இனத்தவருடனும்.....இருத்தல் வேண்டும்.
2. வாசலில் கோலம் போடுதல்..... பண்பாடாகும்.
3. ..... வியாபார அனுமதிப்பத்திரங்களை வழங்கும்.
4. மின்சார இணைப்பினைப் பெற..... நாட வேண்டும்.
5. தற்காலத்தில் ..... அதிகளவு கொள்ளை நோய்களைப் பரப்புகின்றன.
6. ..... மூலம் விசர்க் கடி நோய் பரப்பப்கடுகின்றது.
7. உடல், உளச் சுத்தத்தின் மூன்றாம் படிமுறை..... ஆகும்.
8. உடல், உளச் சுத்தத்தின் இரண்டாம் படிமுறை ..... ஆகும்.

05. பின்வரும் சூரிய நமஸ்காரப் படங்கள் எத்தனையாம் படிமுறை என தெரிவு செய்து கோடிடுக.

1. 
(முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம்)

2. 
(ஒன்பதாம் கட்டம், பத்தாம் கட்டம்)

3. 
(இரண்டாம் கட்டம், ஐந்தாம் கட்டம்)



4. 
(எட்டாம் கட்டம், இரண்டாம் கட்டம்)

KDPS

Scanned with CamScanner

www.lkedu.lk

06. பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.




1..... 2..... 3..... 4..... 5.....

07. சுருக்கமான விடை எழுதுக.

1. இலங்கை எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது? .....

2. இலங்கையின் தேசிய மலர் எது? .....

3. இந்தியாவின் தேசிய பறவை எது? .....

4. எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவைகள் இரண்டு எழுதுக?

   1. ..... 2. .....

5. அரச இலச்சினை காணப்படும் ஆவணங்கள் இரண்டு எழுதுக?

   1. ..... 2. .....

6. கண்ணாடியினால் செய்யப்பட்ட பொருட்கள் இரண்டு எழுதுக?

   1. ..... 2. .....

7. உபகரணங்களை சரியாகக் கையாள்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு எழுதுக?

   1. ..... 2. .....

8. உணவை அசுத்தமடையச் செய்யும் பிராணிகள் இரண்டு எழுதுக?

   1. ..... 2. .....

9. தாவர உண்ணிப் பிராணிகள் இரண்டு எழுதுக?

   1. ..... 2. .....

10. நான்கு இதழ்களைக் கொண்ட பூக்கள் இரண்டு எழுதுக?

    1. ..... 2. .....

KDPS

Scanned with CamScanner

www.tkedu.lk

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

தரம் 04

மாணவர்களுக்கான விடுமுறைகால செயற்றிட்டம்

முதலாந் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை – 2020

பாடம் : கணிதம்

வ. துஷ்யந்தன்(JP),BEd
(Dip.in.teach- primary merit)

பெயர் :- ..... நேரம் :-1. 30 மணித்தியாலம்

01) பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


1. பின்வருவனவற்றுள் ஈரிலக்க எண்ணின் கீழ்க் கோடிடுக.
   1. 13 2. 456 3. 4

2. 132, 231, 123 இவற்றுள் மிகப் சிறிய எண்ணின் கீழ்க் கோடிடுக.
   1. 132 2. 231 3. 123

3. தொண்ணூறு என்பதை இலக்கத்தில் எழுதினால்.
   1. 900 2. 90 3. 9

4. ....., 124 இவ் எண்ணின் முன்னால் உள்ள எண்ணைத் தெரிவு செய்க.
   1. 123 2. 120 3. 125

5. 39 உடன் 2 ஐக் கூட்டினால் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க.
   1. 41 2. 43 3. 45

6. அரைவாசி நிறந் தீட்டப்பட்ட உருவைத் தெரிவு செய்க.
   1.  2.  3. 

7. 16 மாபிள்களில் கால் வாசி மாபிள்கள் எத்தனை?
   1. 4 மாபிள்கள் 2. 8 மாபிள்கள் 3. 6 மாபிள்கள்

8. ஒரு மீற்றர் எத்தனை சென்றி மீற்றரைக் குறிக்கின்றது.
   1. 1 000 cm 2. 100 cm 3. 10 cm

9. 404 மாணவர்களை நான்கு இல்லங்களாக சமமாகப் பிரிக்கப்பட்டால் ஒரு இல்லத்திற்கு கிடைக்கும் மாணவர் தொகை யாது?
   1. 11 2. 101 3. 202

10. மீற்றர் கோலைப்பயன்படுத்தி அளக்கப்படுவன பின்வருவனவற்றுள்.
    1. வகுப்பறையின் நீளம் 2. பென்சிலின் நீளம் 3. புத்தகத்தின் தடிப்பு

02) இடைவெளியைப் பூரணப்படுத்துக.

1) 23, 24, ..., ..., 27, ..., 29, ...,

2) 134, 135, ..., ..., 138, ..., ...

3) ....., 321, 322, ..., ..., 325, ...

KDPS

Scanned with CamScanner

www.lkedu.lk

03) எண் பெயரில் தரப்படுள்ளவற்றை எண்குறியில் எழுதுக.

1. நானூற்று ஐம்பது - .....
2. அறுநூற்று பதினைந்து - .....
3. எண்ணூற்று முப்பத்து ஆறு - .....

04) இடைவெளியைப் பூரணப்படுத்துக.

1.

.....
.....
167
.....
165

2.

393
.....
391
.....
389

3.

239
.....
237
.....
.....

4.

180
.....
182
.....
.....
185

5.

.....
151
.....
153
.....

05. பின்வரும் இலக்கங்களை எண் சட்டத்தில் வகை குறித்துக் காட்டுக.

1) 6 7 4

நூ	ப	ஒ

2) 3 2 8

நூ	ப	ஒ

3) 1 5 0

நூ	ப	ஒ

06. பின்வரும் எண்களை இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக.

1. 847, 630, 279, 471, 819 - .....
2. 588, 800, 510, 440, 504 - .....
3. 272, 739, 633, 440, 236 - .....

07. பின்வரும் இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப் பெரிய மூவிலக்க எண்ணை எழுதுக.

1. 3, 8, 1 - .....
2. 7, 4, 0 - .....
3. 7, 3, 2 - .....

08. பின்வரும் இலக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகச் சிறிய மூவிலக்க எண்ணை எழுதுக.

1. 4, 7, 1 - .....

KDPS

Scanned with CamScanner

www.lkedu.lk

2. 0, 9, 4 - .....

3. 5, 1, 8 - .....

09. அட்டவணையைப் பூரணப்படுத்துக.

எண்	இலக்கம்	இலக்கம் குறிக்கும் பெறுமானம்	இலக்கம் குறிக்கும் இடப் பெறுமானம்
678	**6**	.....	.....
860	**8**	.....	.....
421	**1**	.....	.....

10. விடை காண்க.

1) 2 8
× 5

2) 4 5 3
+ 2 9 5

3) 6 9
- 4 7


4) $2\overline{)64}$

11. பொருத்தமான விடையை இணைப்போம்.


1)	5 × 5	40	6)	2 × 5	45
2)	1 × 5	15	7)	7 × 5	35
3)	8 × 5	25	8)	4 × 5	50
4)	3 × 5	30	9)	9 × 5	10
5)	6 × 5	5	10)	10 × 5	20

12. கீழே தரப்பட்டுள்ள திண்மப் பொருள்களில் முன்பக்கத் தோற்றம், பக்கத் தோற்றம், திட்டம் என்பவற்றை அம்புக் குறிகளுக்கு ஏற்ப வெற்றிடங்களில் சரியாக எழுதுவோம்.

1)



2)







Scanned with CamScanner

www.lkedu.lk

13. சென்ரி மீற்றரை மீற்றர், சென்ரி மீற்றரில் எழுதுக.

1. 123 cm = ... m ..... cm
2. 653 cm = ... m ..... cm
3. 303 cm = ... m ..... cm
4. 283 cm = ... m ..... cm

14. அரைப்பங்கு நிழற்றப்பட்டுள்ள உருக்களின் கீழ் கோடிடுவோம்.

1. 
2. 
3. 
4. 

15. கீழுள்ள நான்கு எண்களையும் பயன்படுத்தி அட்டவணையைப் பூரணப்படுத்துக.

456, 309, 555, 208

கூட்டும் இரண்டு எண்கள்	கூட்டுத் தொகை
456 + 309	765
..... + ...	664
..... + ...	763
..... + ...	517
..... + ...	1011

KDPS

16. கட்டத்தினுள் வரவேண்டிய எண்ணை எழுதி பின்வரும் பிரசினத்தினைத் தீர்க்குக.


1. 80 → -10 → ..... → -20 → .....
2. 99 → -10 → ..... → -22 → .....
3. 85 → -10 → ..... → -15 → .....

Scanned with CamScanner

www.lkedu.lk


17) பிரசினம் தீர்ப்போம்.

1. 8 வட்டங்களில் அரைவாசி எத்தனை வட்டங்களாகும் ?



.....

2. 18 பூக்களில் அரைவாசி எத்தனை பூக்களாகும் ?



.....

3. ஒரு பாடசாலைப் பேருந்தில் 48 பிள்ளைகள் பயணம் செய்யலாம். இவ்வாறான இரண்டு பேருந்துகளில் பயணம் செய்யக் கூடிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கையைக் காண்க?

.....

4. ஒரு பெட்டியில் 12 புத்தகங்களை வைக்கலாம். இவ்வாறான ஐந்து பெட்டிகளில் வைக்கக் கூடிய புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.....

5. ஒரு வகுப்பில் உள்ள 45 மாணவர்களில் 12 பேர் விளையாட்டு மைதானத்துக்குச் சென்றார்கள். இப்போது வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

6. ஒரு போத்தலில் 89 இனிப்புகள் இருந்தன. பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித்த பின்னர் 37 இனிப்புக்கள் எஞ்சியிருந்தன. பகிர்ந்தளித்த இனிப்புகளின் எண்ணிக்கை யாது?

.....

18) கழு/சண்முகா மகா வித்தியாலயத்தில் தரம் 04 மாணவர்கள் விரும்பும் பாடங்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

பாடங்கள்	விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை
கணிதம்	10
தமிழ்	8
சுற்றாடல்	9
ஆங்கிலம்	9

KDPS

Scanned with CamScanner

www.lkedu.lk

1. அதிகமான மாணவர்கள் விரும்பும் பாடம் எது?

.....

2. குறைந்தளவான மாணவர்கள் விரும்பும் பாடம் எது?

.....

3. சமஎண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் பாடங்கள் எவை?

....., ...


4. வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

5. இவ்வகுப்பிலுள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கை 15 எனின் பெண்மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

6. மேழுள்ள அட்டவணையில் உள்ள தகவலை குறிப்பட்டுள்ள நிரல் வரைபில் வரைக?



Scanned with CamScanner

www.lkedu.lk

Karaitivu Development Planning Society
1st term student's evaluation exam-2020
Paper-1

Grade - 04

ENGLISH

Miss. LM.Hirushayini(BSc)
Siththar Academy


Name : .....

Time: 45 min

50

1) Draw the suitable pictures

Eg. tree



1. Bus

2. Umbrella

3. dog

4. Book

5. Pen

(10 marks)

2) Group these words.

Mango, cat, coconut, lion, palmyrah, school, cinema, tiger, Karaitivu, park, monkey

Places	Trees	Animals
Eg. Park	.....	.....
.....	.....	.....
.....	.....	.....
.....	.....	.....
.....	.....	.....

(10 marks)

Scanned with CamScanner

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

3) Look and Write

Eg. big - bigger

1) tall - .....

2) short- .....

3) fat - .....

4) long - .....

5) thin - .....

(10 marks)

4) Underline the places in each sentence.

a) The bus is coming from Kalmunai.


b) Corona virus came fro China.

c) We can stay in our houses safely.

d) All hospitals are open.

(10 marks)

5) Draw and write



a) I'm ..... .

b) I'm in grade ..... .

(10 marks)

Scanned with CamScanner

www.lkedu.lk

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்

தரம் 04

மாணவர்களுக்கான விடுமுறைகால செயற்றிட்டம்

முதலாந் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை – 2020

பாடம் : தாய் மொழி தமிழ்

வ. துஷ்யந்தன்(JP),BEd (Dip.in.teach- primary merit)

பெயர் :- ..... நேரம் :-1. 30 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுவோம்.

01. கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. **துயில்** என்பதன் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்க.
   1. நித்திரை 2. கண் 3. பாடல்

2. உயிர் எழுத்துக்களைக் கொண்ட கூட்டம்.
   1. அ, ஆ, ள 2. உ, ஒ, இ 3. க், ம், ச்

3. வ் + ஒள = ... இடைவெளியில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.
   1. வா 2. வோ 3. வௌ

4. **பாதையில் நாமும் போகையிலே**... எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர்.
   1. எஸ். பாயிஸா அலி 2. அழ. வள்ளியப்பா 3. பாரதியார்

5. கிராமிய விளையாட்டு பின்வருவனவற்றுள் எது?
   1. கிரிக்கட் 2. உன்னதப்பந்தாட்டம் 3. எட்டுக்கோடு

6. **படித்தேன்** என்பது
   1. நிகழ்காலம் 2. இறந்த காலம் 3. எதிர்காலம்

KDPS

02. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.

மனம்	வாழை	அலகு	குழி	வழி	முள்ளை
மணம்	வாலை	அழகு	குளி	வலி	முல்லை

1. நாய் ..... ஆட்டியது.
   குரங்கு .....ப்பழத்தைத் தின்றது.

2. கிளியின் ..... சிவப்பு நிறமானதாகும்.
   மலர்களில் ரோசா மலர் ..... நிறைந்தது.

3. ஆடுகள் .....க்குள் விழுந்தன.
   நாம் தினமும் .....க்க வேண்டும்.

Scanned with CamScanner

www.lkedu.lk

4. காயமடைந்த போர் வீரன் .....யால் துடித்தான்.
   நாம் சரியான .....யில் செல்ல வேண்டும்.

5. .....க் கொடிக்கு தேர் கொடுத்தான், பாரி மன்னன்.
   .....முள்ளால் தான் எடுக்க வேண்டும்.

6. அவனது ..... படபட என அடித்தது.
   பூக்களின் ..... கமகம என வீசியது.

03. எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.

1. மாணவன் - .....
2. தலைவன் - .....
3. புத்திரன் - .....
4. கணவன் - .....
5. தோழி - .....
6. தம்பி - .....
7. சேவகன் - .....
8. சிறுவன் - .....
9. மூத்தவள் - .....
10. ஆண் - .....

KDPS

04. சேர்த்து எழுதுக.

1. நாடு + பற்று - .....
2. பொன் + காசு - .....
3. கண் + உடையார் - .....
4. தீ + பொறி - .....
5. மஞ்சள் + பொடி - .....

05. நிகழ்காலச் சொற்களாக மாற்றி எழுதுவோம்.

1. குரைக்கும் - .....
2. வரைந்தார் - .....

Scanned with CamScanner

www.lkedu.lk

3. படித்தாள் - .....

4. வீசியது - .....

5. நடந்தான் - .....

06) தரப்பட்டுள்ள ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக எழுதுக.

1. நான் தேநீர் குடித்தேன்.

.....

2. பட்டம் வானில் ஆடியாடிப் பறந்தது.

.....

3. அவன் நேற்றுப் படம் வரைந்தான்.

.....

07) பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக

1. சுத்தம் - .....

2. இலாபம் - .....

3. உயர்வு - .....

4. கவனயீனம் - .....

5. மேடு - .....

6. இசை - .....

KDPS

08) ஒருமைச் சொற்களைப் பன்மைச் செற்களாக மாற்றி எழுதுக.

1. நரி - .....

2. கொக்கு - .....

3. பழம் - ..... .

4. பெண் - .....

5. நான் - .....

09. பின்வரும் சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை எனப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. நான் - .....

2. நீங்கள் - .....

3. அது - .....

Scanned with CamScanner

www.lkedu.lk

4. அவர்கள் - .....

5. என்னுடைய - .....

10. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

1. எவ்வளவு பெரிய மலை
2. மனிதனுக்குப் பல விலங்குகள் உதவி புரிகின்றன
3. மரஞ் செடி கொடிகள் எவற்றைத் தருகின்றன

11. பொருத்தமான எழுவாய் அடைமொழியை வைத்து வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

1. காகம் கரைந்தது - .....
2. தம்பி ஓடினான் - .....
3. பூனை பால் குடித்தது - .....

12. கீழுள்ள படத்தினை அவதானித்து நான்கு தொடர்களுக்குக் குறையாமல் மூன்று வாக்கியம் எழுதுக.



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

Scanned with CamScanner